# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண்கள். 65,66,67,68,69 மற்றும் 70/ந/2017
நாள் : 07/02/2019

R. உமாராணி,
சின்னமனூர் – 625 515. – முறையீட்டு மனுதாரர்

1) திரு அப்துல் இரஷீத், ஆணையாளர்,
2) திரு கா.சுப்பையா, ஆணையாளர்,
3) திரு க. சௌந்திரராஜன், ஆணையாளர், – எதிர் மனுதாரர்கள்
4) திரு என்.சரவணகுமார், பொறியாளர்,
5) திரு ரா. மணிமாறன், பொறியாளர்,
6) திரு பி. செல்லத்துரை, குடிநீர்ப் பணி மேற்பார்வையாளர்,
சின்னமனூர் நகராட்சி,
சின்னமனூர்.

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சி, சொக்கநாதபுரம், வார்டு–17, 240–S.B.K. சாலை, என்ற முகவரியில் வசிக்கும் R. உமாராணி அவர்களின் 27.03.2017 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் 03.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 65,66,67,68,69 மற்றும் 70/2017 எண்களிட்ட முறையீட்டு மனுக்களாகப் பதிவு செய்யப்பட்டன. முறையீட்டு மனுக்களாகப் பதிவு செய்யப்பட்ட முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து பெறப்பட்ட சின்னமனூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர், எதிர் மனுதாரர்கள் மற்றும் சாட்சி ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சி, சொக்கநாதபுரம், வார்டு–17, 240–S.B.K. சாலை, என்ற முகவரியில் வசிக்கும் R. உமாராணி என்பவர் சின்னமனூர் நகராட்சியில் திட்டப் பணிகளை செயல்படுத்தியதில் நடைபெற்ற முறைகேடுகளைக் குறிப்பிட்டு, அம்முறைகேட்டில் ஈடுபட்ட நகராட்சி முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். 27.03.2017 நாளிட்ட முறையீட்டு மனுக்களில் முறையீட்டு மனுதாரர் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்:-

(i) நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியதின் மூலமாக ரூபாய் 60/– கோடிக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட சாலை மற்றும் வளர்ச்சிப் பணிகளில் முறைகேடு நடைபெற்றது ;

(ii) சின்னமனூர் நகராட்சி 4–வது வார்டு பட்டாளம்மன் கோவில், 2–வது தெருவில் சிமெண்ட் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை முடிக்கப்பட்டதாக ரூபாய் 4 லட்சம் மோசடி செய்தது ;

(iii) 2012–13–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 4–வது வார்டு காந்தி நகரில் தெருவின் பெயரைக் குறிப்பிடாமல் டெண்டர் விடப்பட்டு ஊழல் செய்தது மற்றும் நான்கு ஆண்டுகளுக்குள்ளாகவே சாலைப்பணிகளுக்கு டெண்டர் விட்டது ;

(iv) ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை மீறி பழைய மற்றும் அடுக்குமாடி வீடுகளுக்கு வர்ணம் பூசியும், புதிதாக வீடுகள் கட்டப்போவதாக போலியாக ஆவணங்கள் தயார் செய்தும் கணிசமான தொகையை கையூட்டாகப் பெற்றுக் கொண்டு மானியத் தொகை ரூபாய் 93,000/– மட்டும் வழங்கியது ;

(v) பி.டி.ஆர். கால்வாய் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அனுமதியில்லாமல் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கியது மற்றும் தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளில் ஊழல் ;

(vi) குழல்விளக்கு இணைப்புகள், டம்பர் பிளேசர் மற்றும் டம்பர் பின்ஸ் தொட்டிகள் வாங்கியதில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான முறைகேடு ;

(vii) 2011–12 மற்றும் 2012–13–ஆம் ஆண்டுகளில் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிகளிலும் ஊழல் முறைகேடு ;

(viii) நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகள் அடங்கிய விவரங்களுடன் தகவல் பலகை அமைக்க வேண்டுதல் ;

(ix) ஆணையாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகிய இருவரும் அனுமதியற்ற மனைப்பிரிவில் கட்டடம் கட்ட அனுமதி வழங்கியும், கட்டட அனுமதியின்றி கட்டடம் கட்டியவர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்திய நபர்களிடம் கையூட்டு பெற்றது ;

(x) 2012–13–ஆம் ஆண்டுகளில் நகர்மன்றத் தீர்மானங்களின் மூலம் வாங்கப்பட்ட இரண்டு டிப்பர் ஆட்டோ, குப்பை சேகரம் செய்யும் பிளாஸ்டிக் பெட்டிகள் மற்றும் 22 தள்ளுவண்டிகள் பயனற்று உள்ளதால் அதன்மூலம் ரூபாய் 14.30 லட்சம் நகராட்சி நிதி இழப்பு மற்றும் தரமற்ற மூன்று சூரிய ஒளி மின்சக்தி விளக்குகளால் ரூபாய் 85,000/– இழப்பு ;

(xi) கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பணியாற்றிய ஆணையாளர்கள் மற்றும் அலுவலர்கள் கூட்டாகச் சேர்ந்து பண மோசடி செய்தது ;

(xii) நகராட்சி பொறியாளர் திரு மணிமாறன் தனது தங்கைக்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான வீட்டை குறைந்த விலைக்கு வாங்கிக் கொடுத்தது.

2. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள எதிர்மனுதாரர்களான நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் அலுவலர்களிடம் விசாரணை மேற்கொண்டதில் அவர்கள் கீழ்க்காணும் காலமுறையில் சின்னமனூர் நகராட்சியில் சம்பந்தப்பட்ட பணிகளில் பணியாற்றியுள்ளதாக அறிய முடிகிறது.

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு அப்துல் இரஷீத் | ஆணையாளர் | 06.08.2012 – 18.11.2014 |
| (2) | திரு கா. சுப்பையா | ஆணையாளர் | 10.07.2015 – 10.02.2016 |
| (3) | திரு சு. சௌந்திரராஜன் | ஆணையாளர் | 01.03.2016 – 08.05.2017 |
| (4) | திரு என். சரவணகுமார் | பொறியாளர் | 20.12.2011 – 05.08.2012 |
| (5) | திரு ரா. மணிமாறன் | பொறியாளர் | 23.03.2014 முதல் |
| (6) | திரு பி. செல்லத்துரை | குடிநீர்ப் பணி மேற்பார்வையாளர் | 2011 நவம்பர் முதல் |

மேற்குறிப்பிட்ட நகராட்சி அலுவலர்களைத் தவிர்த்து முறையீட்டு மனுதாரரின் ஒரே சாட்சியாளரான திரு T. முத்துகணேஷ் என்பவரும் 27.08.2015 முதல் 07.03.2017 வரை சின்னமனூர் நகராட்சியில் துப்புரவு அலுவலராகப் பணியாற்றியுள்ளார்.

3. மேற்குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நகராட்சி ஆணையர் தனது 19.04.2017 நாளிட்ட அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில், சின்னமனூர் நகராட்சியில், 2011–12–ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் அனைத்தும் உரிய ஒப்பந்த விதிகள் பின்பற்றப்பட்டும், மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி செய்திகள் விளம்பரங்கள் மூலம் வெளியிடப்பட்டும், மன்றத்தின் முறையான ஒப்புதலுடனும் தேவையான நேர்வுகளில் நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவின் ஒப்புதலையும் பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். 2011–12 பொன்விழா நகர்ப்புற திட்டத்தின் கீழ், 4–வது வார்டு பட்டாளம்மன் கோவில் இரண்டு தெருக்களிலும் மேற்கொள்ளப்பட்ட பேவர் பிளாக் சிமெண்ட் கல் பதிக்கும் பணிகள் வெவ்வேறு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2012–13–ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முறையாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இதில் ஊழல் முறைகேடுகள் எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அனுமதிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் அனுமதியற்ற வடிகால் இணைப்புகள் வழங்கப்படவில்லை என்றும் ரூபாய் 17.87 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகளுக்கென இரண்டு ஜெனரேட்டர்களும் நகராட்சி அலுவலகத்திற்கு ரூபாய் 6 லட்சம் மதிப்பீட்டில் ஒரு ஜெனரேட்டரும் வாங்கப்பட்டுள்ளதாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், தெருவிளக்குகள் தனியார் பராமரிப்பில் உள்ளதென்றும் டம்பர் பிளேசர் வாகனம் மற்றும் பின்ஸ் முறையான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு வாங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். 2011–2012 மற்றும் 2012–13–ஆம் ஆண்டுகளில் பொன்விழா நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொகையில் வங்கிகள் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். அனுமதிக்கப்பட்ட அனைத்து திட்டப்பணி வேலைகளுக்கும், அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விவரப்படி திட்டப்பணிகள் விவரங்கள் அனைத்தும் தெரிவிக்கும் வகையில் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். 2012–13–ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட இரண்டு டிப்பர் ஆட்டோ மற்றும் 22 எண்ணிக்கையிலான தள்ளுவண்டிகள் நல்ல நிலையில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட தள்ளுவண்டிகளும் நல்லமுறையில் செயல்படுவதாகத் தெரிவித்துள்ளார். மழைக்காலங்கள் தவிர்த்து 3 எண்ணிக்கையிலான சூரிய மின் சக்தி விளக்குகளும் நல்ல முறையில் செயல்படுவதாக ஆணையர் தெரிவித்துள்ளார். கடந்த 5 ஆண்டுகளில் பணியாற்றிய நகராட்சி அலுவலர்கள் அனைவரும் முறைகேடாக வரப்பெற்றப் பணத்தை பங்கிட்டுக் கொண்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டையும் நகராட்சிப் பொறியாளர் திரு மணிமாறன் அவர்களின் சகோதரி சின்னமனூரில் வீடுவாங்கிய குற்றச்சாட்டினையும் மறுத்துள்ளார். மேலும், சின்னமனூர் நகராட்சியில் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவில், பொதுப்பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தை தனது சொந்தப் பயன்பாட்டிற்கு வழங்க முறையீட்டு மனுதாரர் கோரியதாகவும், அதை நகராட்சி மறுத்த நிலையிலேயே மேற்குறிப்பிட்ட புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், நகராட்சியால் அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை மனுதாரர் சுயமாக அகற்றியதை சுட்டிக்காட்டி விசாரித்ததைத் தொடர்ந்து உள்நோக்கத்துடன் இக்குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் குறித்து சொக்கநாதபுரம் பகுதியில் விசாரித்தால் புகார் மனுதாரரின் உண்மையான நோக்கம் புரியும் என்றும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரிடம் 08.06.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது தனது முறையீட்டு மனுவில் தெரிவித்த குற்றச்சாட்டுகளை உறுதி செய்ததுடன் சின்னமனூர் நகராட்சியில் 650 வீடுகள் பணி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு நகராட்சியில் பணம் பட்டுவாடா செய்துள்ளார்கள் என்றும், ஆனால் இத்திட்டத்தில் ஒரு வீடு கூட பயனாளிகளுக்கு போய் சேரவில்லை என்றும், நகராட்சி ஆணையரின் அறிக்கையில் இந்த திட்டத்தை பற்றி ஒரு குறிப்பும் இல்லை என்றும் இந்த திட்டத்தில் பெரும் அளவு மோசடி நடந்துள்ளது என தெரியவருகிறது என்றும், இதில் நகராட்சித் தலைவர் முதற்கொண்டு மேற்பார்வையாளர், நகராட்சிப் பொறியாளர் அனைவரும் கூட்டாக இணைந்து மோசடி செய்துள்ளார்கள் என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். சின்னமனூர் நகராட்சியில் ஆணையாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகிய இருவரும், அங்கீகாரமில்லாத மனைப்பிரிவில் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்தவர்களிடமும், கட்டிட அனுமதியின்றி கட்டிடம் கட்டியவர்களிடமும் நகராட்சிக்கு சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்களிடமும் அனுமதியின்றி மனைப்பிரிவு ஏற்படுத்தி (பிளாட்) விற்பனை செய்பவர்களிடமும் மிரட்டி ரூபாய் லட்சக் கணக்கில் ஒரு கோடிக்கு மேல் லஞ்சமாக பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் கட்டிட அனுமதி வழங்கி, ஊழல் முறைகேடுகளில் ஈடுபடுகிறார்கள் என்றும், துப்புரவு பணியாளர்கள் 17 பேர் நியமித்திருக்கிறார்கள் என்றும் அதில் யாரும் துப்புரவு பணி பார்க்க வில்லை என்றும் அவர்கள் அனைவரும் கையூட்டு பணி செய்துவருகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார். அதிகாரிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் செய்த கூட்டுச் சதியால் அரசு வழங்கிய நிதி மற்றும் பொதுமக்கள் வரியாக செலுத்திய பொது நிதியும் சேர்ந்த எந்த பயனும் யாருக்கு சேரவேண்டுமோ அவர்களுக்கு சேரவில்லை என்றும், சின்னமனூர் நகராட்சியில் துப்புரவு அலுவலராக பணியாற்றிய திரு T. முத்துகணேஷ் அவர்கள் தொடர்ந்து சின்னமனூர் நகராட்சியில் நடைபெற்ற முறைகேடுகளை தட்டிக் கேட்டதனால் அவர் அறந்தாங்கி நகராட்சிக்கு துப்புரவு ஆய்வாளராக பணி மாறுதல் செய்யப்பட்டார் என்று தெரிவித்து அவர் அளித்த உறுதி மொழி ஆவணத்தை விசாரணையின் போது சமர்ப்பித்தார். அவருக்கு அழைப்பாணை அனுப்பினால் வந்து சாட்சியம் அளிக்க தயாராக உள்ளார் என்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் நகராட்சி

சம்பந்தப்பட்ட பணிகளுக்கு இடைத்தரகர்கள் மூலம் ரூ.500/- (அ) ரூ.1000/- லஞ்சம் கேட்கிறார்கள் என்றும், அது மட்டுமில்லாமல் புதிதாக பேருந்து நிலையம் கட்டப்பட்டுவருவதாகவும் அதில் தரமில்லாத சிமெண்ட் வேலைகள் நடைபெற்று வருவதாகவும், நகராட்சி கட்டிடம் கட்டி 15 ஆண்டுகள் கூட ஆகவில்லை அதை இடித்துவிட்டார்கள் என்றும், புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் இதிலும் பண மோசடி சதி உள்ளது என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

5. எதிர்மனுதாரர்களில் ஒருவரான திரு A. அப்துல் இரஷித் அவர்கள் 06.08.2012 முதல் 18.11.2014 வரை நகராட்சி ஆணையராகப் பணியாற்றியுள்ளார். அவரது பணிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகளின் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்று தெரிவித்துள்ளதுடன் தனது பணிக் காலத்திற்கு முன்பே ஜெனரேட்டர்கள் வாங்கப்பட்டுள்ளன என்றும், டியூப் லைட் இணைப்புகள், டம்பர் பிளேசர் மற்றும் பின்ஸ் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டே வாங்கப்பட்டுள்ளதாக விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், சின்னமனூர் நகராட்சி தமிழ் நாட்டில் உள்ள நகராட்சிகளில் நூறு சதவிகித அடிப்படை வசதி அடைந்த நகராட்சி என்று விசாரணையின் போது குறிப்பிட்டார். மனுதாரின் புகார் உண்மைக்கு புறம்பானது என்றும் ஏதோ உள்நோக்கத்துடன் பிரதிபலன் எதிர்பார்த்தே 5 வருடங்கள் கழித்து புகார் செய்துள்ளார், என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

6. சின்னமனூர் நகராட்சியில் 10.07.2015 முதல் 10.02.2016 முடிய 7 மாதங்களே பணியாற்றிய ஆணையர் திரு கா. சுப்பையா அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஒருங்கிணைந்த குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் (IHSDP) கீழ் 365 பயனாளிகளுக்கு ரூ. 82,12,500/- நான்கு தவணைகளில் தனது பணிக்காலத்தில் வழங்கப்பட்டது என்றும், ஒவ்வொரு தவணையிலும் ரூ.22,500/- விடுவிக்கும் போது சம்பந்தப்பட்ட வீட்டினை தள ஆய்வு செய்து, விதிகளின்படி கட்டப்பட்டிருந்தால் மட்டுமே நிதியினை விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்டதாகவும், அப்போது HUDCO அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்து தனக்கு நல்லதொரு சான்று வழங்கினார்கள் என்றும் தெரிவித்துள்ளார். பயனாளிகளுக்கு வழங்கப்படும் தவணைத் தொகை வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டதென்றும் குறிப்பிட்டார். எந்தவித ஆதாரமும் இல்லாமல் மொத்தம் பொதுவாக ரூபாய் 30,000/- முதல் ரூபாய் 40,000/- வரை பயனாளிகளிடம் கையூட்டாக பெறப்பட்டது என்ற குற்றச்சாட்டு உள்நோக்கத்துடனும் காழ்ப்புணர்ச்சி அடிப்படையிலும் தெரிவிக்கப்பட்ட புகார் எனவும் விசாரணையின் போது தெரிவித்தார். நகராட்சியில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களுக்கு விதிமுறைகளின்படியே கட்டட அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், முத்தாலம்மன் கோயில் தெருவில் உள்ள வண்டிப்பேட்டையில் ரூபாய் 1 கோடி மதிப்புள்ள நகராட்சி இடம் 40 ஆண்டு காலமாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருந்தது என்றும், அந்நிலம் தனது பணிக்காலத்தில் மீட்கப்பட்டதென்றும், மேலும், காவல்நிலையம் அருகே 50 ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டடம் அகற்றப்பட்டதாகவும், சிப்பாலை கோட்டை குறுக்குத் தெருவில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த கழிப்பறையும் அகற்றப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், தன்னுடைய பணிக்காலத்தில் 18 நபர்கள் துப்புரவுப் பணியாளர்களாக பணிநியமனம் செய்யப்பட்டனர் என்றும் இதில் 11 நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமும் 7 நபர்களின் நியமனங்கள் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையிலும் நியமனம் செய்யப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளார். துப்புரவு பணியாளர் நியமனத்தில் எந்த முறைகேடுகளும் நடைபெறவில்லை என்றும், தணிக்கை அதிகாரிகளும் நியமனம் குறித்து எந்தவித முறைகேட்டினையும் சுட்டிக்காட்டவில்லை என்று தெரிவித்தார். முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் மொத்தம் பொதுவானது என்றும், குற்றச்சாட்டுகளை தெரிவித்த முறையீட்டு மனுதாரர் சின்னமனூர் நகராட்சியில் **துப்புரவு அலுவலராகப் பணியாற்றிய திரு T.முத்துகணேஷ் என்பவரின் தூண்டுதலினாலேயே புகார் அளித்துள்ளார் எனவும் விசாரணையின்போது** குறிப்பிட்டார். முன்னாள் துப்புரவு ஆய்வாளர் திரு திருப்பதியிடம் விசாரித்தால், மனுதாரர் உமாராணி பொய்யான குற்றச் சாட்டுகளை எழுத தூண்டிய திரு T.முத்துகணேஷ் அவர்களின் தீய எண்ணம் தெரியவரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

7. முறையீட்டு மனுதாரின் குற்றச்சாட்டுகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்த நகராட்சி ஆணையர் திரு க. செல்வக்கிராஜன் அவர்களிடமும் 28.06.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. புகார் மனுதாரரின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திரு T. முத்துகணேஷ் என்பவர் தான் சின்னமனூர் நகராட்சியில் ஆணையராகப் பணியேற்றபோது துப்புரவு அலுவலராகப் பணி புரிந்து வந்தார் என்றும், அவர் தனது பணியை சரிவர மேற்கொள்ளாமல் **பலமுறைகேடுகளில் ஈடுபட்டு, மாதம் ஒன்றிற்கு சராசரியாக ரூ.65000/- நகராட்சி நிதியை மறைமுகமாக கையாடல் செய்து வந்ததை தடுத்ததால் தன்மீது வன்மம் கொண்டு இந்த புகார் மனுவை கொடுக்க தூண்டியுள்ளார் என்றும்,** அதன் விபரம் தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தான் எழுதிய நேர்முகக் கடிதத்தின் நகலினையும்,

துப்புரவு அலுவலரின் நேரடி மேலதிகாரியாகிய தான் விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கியதால் அதனை எதிர்த்து திரு T. முத்துகணேஷ் , துப்புரவு அலுவலர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த வழக்கு WP (MD)No.1303/2017 மற்றும் WMP (MD)No.1083/2017 குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலர் அவர்களுக்கு தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட கடித நகலினையும் விசாரணையின் போது சமர்ப்பித்தார். மேலும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு முறையீட்டு மனுதாரரின் உபயோகத்திற்கு நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலத்தை தர தான் மறுத்ததாலும், திரு T. முத்துகணேஷ், துப்புரவு அலுவலரது முறைகேடுகள் குறித்து உயர் அலுவலர்களுக்கு கடிதங்கள் எழுதியதாலும், பொய்யாக இருவரும் என்மீது புகார்மனு கொடுக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் இம்மனுவினை கொடுத்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

8. சின்னமனூர் நகராட்சியில் 20.12.2011 முதல் 05.08.2012 முடிய சுமார் 7 மாதங்கள் மட்டுமே பணி புரிந்த பொறியாளர் திரு என். சரவணகுமார் அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவரது பணிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் முறையாக மேற்கொள்ளப் பட்டதென்றும் அவரது பணிக்கு முந்தைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட சாதனங்கள் நல்லமுறையில் செயல்படுகின்றன என்று விசாரணையின் போது தெரிவித்தார். திரு என். சரவணகுமார் அவர்களது பணிக்காலத்திற்குப் பின் நகராட்சி பொறியாளர் பொறுப்பினை ஏற்ற பொறியாளர் திரு ரா. மணிமாறன் அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஒப்புதளிக்கப்பட்ட மனைப்பிரிவில், விதிமுறைகளின்படி பொது உபயோகத்திற்கென ஒப்படைக்கப்பட்ட நிலத்தை தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக மனுதாரர் வழங்கக் கோரியபோது வழங்க மறுத்ததாலும், நகராட்சியால் அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை மனுதாரர் சுயமாக அகற்றியதை சுட்டிக்காட்டப்பட்டு விசாரித்ததாலும் புகார் மனுதாரர் தவறான உள்நோக்கத்துடன் நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் எண்ணத்தில் புகார் தெரிவித்துள்ளதுடன், கூட்டு சதி செய்ததாக ஆணையர், நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஓவர்சியர் மீது புகார் தெரிவித்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும், புகார் மனுதாரர் குறித்து அன்னார் வசிக்கும் சொக்கநாதபுரம் பகுதியில் விசாரித்தால் புகார் மனுதாரரின் உண்மையான நோக்கம் தெரியவரும் என்றும் நகராட்சி ஆணையர் திரு க. சௌந்திரராஜன் தெரிவித்ததை பொறியாளர் திரு ரா. மணிமாறனும் உறுதி செய்துள்ளார். மேலும், சின்னமனூர் நகராட்சி பொறியாளராகப் பொறுப்பேற்பதற்கு முன்பே, சின்னமனூர் நகராட்சியில் தனது சகோதரி பழைய வீடு ஒன்றினை வாங்கி குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட காலத்தில் பதவியில் இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மூலம் நகர்மன்ற அனுமதி பெற்ற பின்னரே பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டதென்றும், இப்பணிகளின் விபரம் அனைத்தும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இப்பணிகள் நடைபெற்றது தெரியும் என்றும், அவர்களிடமும் பொது மக்களிடமும் இது குறித்து விசாரணை செய்தால் மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என அறிய நேரிடும் என்றும் புகார் மனுதாரரின் உண்மையான நோக்கம் தெளிவாக புரியும் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

9. சின்னமனூர் நகராட்சியில் குடிநீர் பணி மேற்பார்வையாளராகப் பணிபுரியும் திரு பி. செல்வத்துரை அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது சின்னமனூர் பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகம் கட்டப்படுவது குறித்து விசாரணையின் போது தெரிவித்தார். பேருந்து கட்டுமானப் பணிகள் தற்சமயம் முடியும் நிலையில் உள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நகரிலுள்ள நாளிதழ் ரிப்போர்ட்டரை அழைத்து வந்து பார்வையிட்டு கட்டுமானம் சிறப்பாக உள்ளது என்று கூறியுள்ளார் என்றும், நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளரால் முறையாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவரின் நேரடி கண்காணிப்பில் உள்ளது என்றும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் மாதம் இருமுறை ஆய்வு செய்துள்ளார் என்றும் எனவே, இது பொய்யான குற்றச்சாட்டாகும் என்றும் தெரிவித்தார். மேலும் பழைய அலுவலக கட்டிடம் குறித்து தினசரி நாளிதழில் செய்தி வெளியானதின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்த கோரினார் என்றும், மேலும், கட்டிடத்தின் உறுதித் தன்மை குறித்து மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் சான்று பெறப்பட்டு முறையாக இடித்து அப்புறப்படுத்தப்பட்டு உள்ளது என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

10. முறையீட்டு மனுதாரரின் சாட்சியாளரும் நகராட்சி துப்புரவு அலுவலருமான திரு T. முத்துகணேஷ் அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. முறையீட்டு மனுதாரர் R. உமாராணியை தனக்கு ஓராண்டாகத் தெரியும் என்றும் அவர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்தது தனக்கு பின்னர்தான் தெரியவந்தது என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், தானும் நகராட்சி ஆணையாளர் அவர்களால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக தனக்குத்

தெரிந்த உண்மைகளை கூற முன்வந்துள்ளதாகக் குறிப்பிட்டு நகராட்சி ஆணையாளர் திரு க. சௌந்திரராஜன் அவர்களுக்கும் தனக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைக் குறிப்பிட்டார். மேலும், நகராட்சி ஆணையர் திரு கா. சுப்பையா அவர்கள் தனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் பண்பினைக் கொண்டவர் என்றும் விசாரணையின் போது குறிப்பிட்டார். ஆனால், முறையீட்டு மனுதாரர் மனுவில் உள்ள எந்த விவரமும் தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.

11. முறையீட்டு மனுதாரர் சுமார் பத்துக்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட சாதனங்கள் நகர்மன்றம் செயல்பாட்டில் இருந்தபோது மேற்கொள்ளப்பட்டும் வாங்கப்பட்டுள்ளன. முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்து 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில்தான் இம்முறைமன்ற நடுவத்தில் சுமார் 5 ஆண்டுகள் கழித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகளை உறுதி செய்யும் வகையில் ஆதார ஆவணங்களையும் தாக்கல் செய்ய மனுதாரர் தவறியுள்ளார். மேலும், 2012–ஆம் ஆண்டு முதல் முறையீட்டு மனுத் தாக்கல் செய்யும் நாள் வரை மூன்று ஆணையாளர்கள் , இரண்டு பொறியாளர்கள் மற்றும் ஒரு குடிநீர் பணி மேற்பார்வையாளர் என ஐந்து அலுவலர்கள் நகராட்சியில் பணி புரிந்துள்ளனர். முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் யார் யார் காலத்தில் நடைபெற்றன எனக் குறிப்பிட்டு மனுதாரர் தெரிவிக்கவில்லை. முறைகேடாக கட்டட அனுமதி வழங்கப்பட்ட நபர்கள் மற்றும் ஆக்கிரமிப்புதாரர்களிடம் ஒரு கோடிக்கு மேல் கையூட்டு பெற்றதாக முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். அவ்வாறு கையூட்டு வழங்கிய பயனாளிகள் மற்றும் பலன் பெற்ற அலுவலர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. மேலும், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு இடைத்தரகர்கள் மூலம் ரூ. 500/– அல்லது ரூ. 1,000/– கையூட்டு பெறுகின்றனர் என்றும் அவ்வாறு கையூட்டு வழங்கி சான்றிதழ்கள் பெற்ற நபர்களின் விவரங்களையும் குறிப்பிட மனுதாரர் தவறியுள்ளார். நகராட்சி ஆணையர் திரு க. சௌந்திரராஜன், பொறியாளர் திரு ரா.மணிமாறன் மற்றும் குடிநீர் பணி மேற்பார்வையாளர் திரு பி. செல்வத்துரை திட்டப்பணிகளுக்கு வழங்கிய நிதியை தங்களது உறவினர்கள் மூலம் பிரித்து வைத்துள்ளனர் என்றும் பொறியாளர் திரு ரா. மணிமாறன் அவர்களது சகோதரிக்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான வீட்டை குறைந்த மதிப்பில் வாங்கி கொடுத்துள்ளார் என்று முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால், மேற்குறிப்பிட்ட வீடு எப்பொழுது வாங்கப்பட்டது மற்றும் கிரயம் செய்து தந்த நபரின் பெயர் மற்றும் ஆவண நகல்களையும் முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. தங்கள் பகுதி மக்களின் சார்பில் பல புகார்கள், அரசியல் சுவரொட்டிகள் மற்றும் பல போராட்டங்கள் மூலம் கடந்த ஆண்டுகளில் முறையிட்டும் எந்தவொரு பலனும் இல்லாத நிலையில் தான் மகளிர் சார்பில் முறையீட்டு மனுவை சமர்ப்பித்ததாக தெரிவித்துள்ள முறையீட்டு மனுதாரர் தனது குற்றச்சாட்டுகளுக்கு சாட்சியாளராக பாதிக்கப்பட்ட எந்தவொரு உள்ளூர் நபரையும் குறிப்பிடாமல், நகராட்சிப் பணியாளரான திரு T. முத்துகணேஷ் என்பவரை, சாட்சியாளராக குறிப்பிட்டதின் நோக்கம் என்ன எனத் தெரியவில்லை. திரு T. முத்துகணேஷ் நகராட்சி ஆணையரால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே தனக்குத் தெரிந்த உண்மைகளை சொல்ல முன்வந்துள்ளார் என்று 29.06.2017 அன்று அவரிடம் விசாரணை மேற்கொண்டபோது, தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொண்டபொழுது திரு T. முத்துகணேஷ் அவர்களின் உறுதி மொழி ஆவணத்தை சமர்ப்பித்துள்ளார். நகராட்சியில் நடைபெற்ற முறைகேடுகளை கண்டறிந்த சாட்சியாளர் திரு T. முத்துகணேஷ், நகராட்சி ஆணையர் திரு க. சௌந்திரராஜன், பொறியாளர் திரு ரா.மணிமாறன் மற்றும் குடிநீர் பணி மேற்பார்வையாளர் திரு பி. செல்வத்துரை குறித்த குற்றச்சாட்டுகள் மட்டுமே அவர் தாக்கல் செய்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மற்ற மூன்று எதிர்மனுதாரர்கள் குறித்து சாட்சியாளரான திரு T.முத்துகணேஷ் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. நகராட்சியில் நடைபெற்ற முறைகேடுகளை கண்டறிந்த முறையீட்டு மனுதாரரின் சாட்சியாளரும் நகராட்சி துப்புரவு அலுவலருமான திரு T. முத்துகணேஷ் உரிய முறையில் துறையின் மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல் பொதுமக்களில் ஒருவரான முறையீட்டு மனுதாரருக்கு சாட்சியாளராக செயல்பட்டுள்ளார். மேலும், நகராட்சி ஆணையர் திரு க. சௌந்திரராஜன் என்பவருக்கும் தனக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளின் அடிப்படையிலேயே சாட்சியாளரும் துப்புரவு அலுவலருமான திரு T.முத்துகணேஷ் முறையீட்டு மனுதாரரின் நலனுக்காகவே சாட்சியமளிக்க முன்வந்துள்ளார் எனவும் உறுதி ஆகிறது. மேலும், அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவில் பொதுப்பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்ட நிலத்தினை தனது தனிப்பட்ட உபயோகத்திற்கு வழங்க மறுத்ததாலும், நகராட்சியால் அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை மனுதாரர் அகற்றியதை சுட்டிக்காட்டி விளக்கப்பட்டதாலேயே தவறான உள்நோக்கத்துடன் நகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் எண்ணத்தில் புகார் செய்துள்ளார் என எதிர்மனுதாரர்களில் ஆணையர் ஒருவரும் நகராட்சிப் பொறியாளர் ஒருவரும் தெரிவித்துள்ளனர். பொது நலனில் அக்கறை கொண்டு முறையீடு செய்துள்ள முறையீட்டு மனுதாரர் மீதான மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டிற்கும் நகராட்சி நிர்வாகம் எந்தவொரு ஆதார ஆவணத்தையும்

சமர்ப்பிக்கவில்லை. சின்னமனூர் நகராட்சியில் நடைபெற்றதாக கூறப்படும் முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு, குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு ஆதார ஆவணங்களையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. எனவே, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 7–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **R. உமாராணி,**
   **240, எஸ்.பி.கே. ரோடு, வார்டு எண்.17, சொக்கநாதபுரம்,**
   **சின்னமனூர் – 625 515.**

2. நகராட்சி ஆணையர்,
   சின்னமனூர் நகராட்சி, **சின்னமனூர் – 625 515.**

3. திரு அப்துல் இரஷித்,
   முன்னாள் சின்னமனூர் நகராட்சி ஆணையாளர்,
   (சின்னமனூர் நகராட்சி ஆணையர் மூலமாக).

4. திரு கா.சுப்பையா,
   முன்னாள் சின்னமனூர் நகராட்சி ஆணையாளர்,
   (சின்னமனூர் நகராட்சி ஆணையர் மூலமாக).

5. திரு க. சௌந்திரராஜன்,
   முன்னாள் சின்னமனூர் நகராட்சி ஆணையாளர்,
   (சின்னமனூர் நகராட்சி ஆணையர் மூலமாக).

6. திரு என்.சரவணகுமார்,
   முன்னாள் சின்னமனூர் நகராட்சி பொறியாளர்,
   (சின்னமனூர் நகராட்சி ஆணையர் மூலமாக).

7. **திரு ரா. மணிமாறன்,**
   **பொறியாளர்,**
   சின்னமனூர் நகராட்சி,
   (சின்னமனூர் நகராட்சி ஆணையர் மூலமாக).

8. திரு பி. செல்லத்துரை,
   குடிநீர்பணி மேற்பார்வையாளர்,
   சின்னமனூர் நகராட்சி,
   (சின்னமனூர் நகராட்சி ஆணையர் மூலமாக).

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**